# வள்ளலார் கண்ட தெய்வங்கள்

ஞானியர் தெய்வங்களைக் காண்பர் என்னும் கூற்றை வள்ளலார் தமது வாழ்வில் அனுபவித்துள்ளார். ஒன்பது வயதில் தமது வீட்டின் சிறிய அறையில் அமர்ந்து தியானம் செய்யும்போது ஞானப்பழமாகிய முருகப்பெருமான் தோன்றி அருள் புரிந்தார். இதனை வள்ளலார் ஐந்தாம் திருமுறையில் பாடி வைத்துள்ளார். மயிலின் மீது அமர்ந்த கோலத்தில் ஆறுமுகமும், கடம்ப மாலையும், பன்னிரு தோள்களும், தாமரைத் தாள்களும், வேலும், சேவற்கொடியும் விளங்கிடத் தோன்றி ஆசீர்வதித்தார் என்று மிகத் தெளிவாகப் பாடியுள்ளார். அடுத்ததாக தமது பன்னிரண்டாவது வயதில் ஒரு நாள் மாலை நேரத்தில் சென்னை வீட்டுத் தெருவில் விளையாடிக் கொண்டிருந்தார். அப்போது சிவபெருமான் அங்கு தோன்றி, எவரும் அறியாத வண்ணம் வள்ளலார் கழுத்தில் சிவமாலை ஒன்றை அணிவித்துள்ளார். இந்தத் தெய்வச் செயல் ஆறாம் திருமுறையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் இராமலிங்கர் ஒரு நாள் நள்ளிரவில் பசியால் சோர்ந்து திண்ணையில் படுத்துறங்கியபோது, அவர் பசியைக் கண்டு பொறுக்காத வடிவுடையம்மை நேரில் வந்து உணவைக் கொடுத்ததை முதலாம் திருமுறையில் பாடியுள்ளார்.

பகவான் இராமகிருஷ்ண பரமஹம்சர் , அருணகிரிநாதர், பாம்பன் சுவாமிகள், ஆதிசங்கரர் முதலியோர் தெய்வங்களைக் கண்டு தரிசித்துள்ளதை வள்ளலாரின் அனுபவமும் கையெழுத்து சாட்சியங்களும் உறுதி செய்கின்றன. மேலும் சித்தர்கள் பலரும் தெய்வங்களை காணலாம், உரையாடலாம் என்பதை தங்கள் பாடல்களில் பாடி வைத்துள்ளனர். உலகம் போற்றும் திருவள்ளுவரும் தெய்வம் என்ற சொல்லை பல குறட்பாக்களில் பயன்படுத்தியுள்ளார். இங்கு தெய்வம் எனப்படுவது பரப்பிரம்மத்தை அல்லாது அதன் ஒளியிலிருந்து தோன்றிய படைப்புகளின் ஒரு பகுதி என்பதனை அகத்தியர் தமது வாதஞான சௌமியம் என்னும் நூலில் விவரித்துள்ளார். திருமந்திரம் தந்த திருமூலர், தெய்வங்கள் பலப்பல உண்டென்றும், ஆர்வம் உள்ளவர் மட்டுமே தெய்வத்தைக் காண்பர் என்பதை உறுதியாகக் கூறுகிறார். இந்து மதத்தில் மட்டுமல்லாது மற்ற

மதங்களும் தெய்வங்கள் உண்டு என்பதை ஏற்றுக்கொள்கின்றன. வானவர்கள், தேவர்கள், மலக்குகள் என்று பல வேறு பெயர்களில் குறிப்பிட்டாலும் இவை அனைத்தும் தெய்வங்களே என்பது ஞானிகள் முடிவாகும்.

**டாக்டர். ஆறுமுகம் ராமன், வட மலேசிய பல்கலைக்கழகம்.**